Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஆவணி 05 திங்கட்கிழமை (21.08.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 266

### முல்லைத்தீவு குண்டு வீச்சுக்கு தமிழகம் எங்கும் எதிர்ப்பு அலை

# சென்னையில் நேற்று கறுப்புப்பட்டி பேரணி
# இன்று பல இடங்களில் கண்டனக் கூட்டங்கள்!

சென்னை, ஓக. 21

முல்லைத்தீவு செஞ்சோலை வளாகம் மீது நடத்தப்பட்ட விமானக் குண்டு வீச்சைக் கண்டித்துச் சென்னையில் தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழு நேற்றுக் கறுப் புக்கொடிப் பேரணி நடத்தியது.

சென்னை அண்ணாசாலை மன்றோ சிலையிலிருந்து சேப்பாக்கம் அரசு விருந்தினர் மாளிகை வரை நேற்று மாலை இப்பேரணி நடத்தப்பட்டது.

தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன், பெரியார் திராவிடர்கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், தமிழ்நாடு அன்னையர் முன்னணியின் தலைவர் பேராசிரியர் சரசுவதி, தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியின் பொதுச்செயலாளர் பெ.மணியரசன், கவிஞர அறிவுமதி, இயக்குநர்கள் வி.சி. குகநாதன், சீமான், புகழேந்தி உட்பட பலர் (04ஆம் பக்கம் பார்க்க)



முல்லைக் குண்டுவீச்சைக் கண்டித்துசென்னையில் நேற்று நடத்தப்பட்ட கறுப்புப்பட்டிப் பேரணியின்போது எடுக்கப்பட்ட படங்கள்.

# வட யுத்த முனையில்
# அசாதாரண அமைதி
## ஷெல், விமானத் தாக்குதல்களும் ஓய்வு

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 21

வடக்கில் கடந்த ஒரு வாரகாலத்துக்கு மேலாக கடும் சண்டை நடைபெற்றுவந்த முகமாலை, கிளாலிப் போர்முனைப் பகுதியில் சனிக்கிழமை காலை தொடக்கம் இனம் புரியாத மயான அமைதி நிலவுகின்றது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்தப் பகுதியில் கடந்த 24 மணித்தியாலங்களுக்கு மேலாகப் பெரிய மோதல்கள் எதுவும் இடம்பெறவில்லை. விமானக் குண்டு வீச்சு மற்றும் ஷெல், பீரங்கித் தாக்குதலகளும் ஓய்ந்து போயுள்ளன.

முகமாலை அடங்கலாக தென்மராட்சி போர் முனையில் அமைதி நீடிப்பதை படைத்தரப் பும் புலிகளின் வட்டாரங்களும் உறுதி செய்தன. இடையிடையே ஓரிரு ஷெல்கள் வெடித்தன. எனினும் அப்பிரதேசத்தில் சண்டை ஓய்ந்துள்ளது என்று கிளிநொச்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

(04ஆம் பக்கம் பார்க்க)

### இந்திய அணி திரும்புகிறது

இந்திய அணியின் இலங்கைப் பயணம் வீணானது. கொழும்பில் கடந்த 10 நாள்களாக மழை கொட்டியதால் ஒரு போட்டியில் கூட முழுமையாக விளையாட இயலவில்லை. மழை தொடரும் அபாயம் இருப்பதால், இந் தியா- இலங்கை இடையிலான ஒரு நாள் தொடர் ரத்து செய்யப்படுகிறது. இந்திய அணி இன்று மாலை நாடு திரும்புகிறது.

கடந்த 10 ஆம் திகதி இலங்கை, தென்.

(04ஆம் பக்கம் பார்க்க)

### இலங்கைத் தூதரை வெளியேற்றுக! திருமாவளவன் அவசர கோரிக்கை!

சென்னை, ஓக. 21

சென்னையிலுள்ள இலங்கைத் தூதர கத்தை மூடவேண்டும் என்றும், அந்த நாட் டுத் தூதுவரை நாட்டைவிட்டு வெளியேற்ற வேண்டும் என்றும் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் திருமாவளவன் அவசர கோரிக்கை விடுத்துள்ளார்.

முல்லைத்தீவில் 61 தமிழ்ச் சிறுமிகள் உயிரிழந்த சம்பவத்தைக் கண்டித்து தமிழகச் சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்

(04ஆம் பக்கம் பார்க்க)

### கிழக்கில் படையினர்–புலிகள் மாறி மாறி ஷெல் வீச்சு!

ஏறாவூர், ஓக.21

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல இடங் களிலும் அமைந்துள்ள படை முகாம்களை நோக்கி நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட் டுப் பிரதேசங்களில் இருந்து கடுமையான ஆட்லறித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட் டன.

படையினரும் பதிலுக்கு மோட்டார் ஷெல் மற்றும் ஆட்லறித் தாக்குதலை மேற்கொண் டனர். பரஸ்பரம் இரண்டு தரப்பினரும் தாக்கு

(04ஆம் பக்கம் பார்க்க)

### கப்பல் வருவது தாமதமாகும்!

யாழ்ப்பாணம்,ஓக.21

குடாநாட்டுக்குத் தேவையான அத்தியா வசியப் பொருள்களுடன் கப்பல் ஒன்று நாளை புறப்படும் என்று எதிர்பார்க்கப்பட் டது. ஆனால், கொழும்பில் நிலவும் காலநிலை

(04ஆம் பக்கம் பார்க்க)

### மாலையில் மீண்டும் ஷெல் வீச்சு!

யாழ்ப்பாணம், ஓக.21

வடக்கு யுத்த முனையில் நேற்றுப் பிற்பகல் வரை அமைதி நீடித்தபோதிலும் பிற்பகல் 4.00 மணிக்குப் பின் மீண்டும் ஷெல் வீச்சுக்கள் இடம்பெற்றன என்று அங்கிருந்து பிந்திக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

யாழ். நகரப் பகுதியில் உள்ள பீரங்கி நிலையில் இருந்தும், பலாலிப் படை முகாம் பிரதேசத்தில் இருந்தும், தென்மராட்சி போர் அரங்கப் பகுதி நோக்கி நேற்றுப் பிற்பகல் கடும் ஷெல் தாக்குதல்கள் மீண்டும் ஆரம்பித்தன என்றும் செய்திகள் தெரிவித்தன. (ஐ)

## வவுனியாவில் புதிய போர்முனை அரசுப் படைகள் திறக்கக்கூடும்?

கொழும்பு, ஓக. 21

வவுனியா பகுதியில் இராணுவத்தினர் பெரும் எண்ணிக்கையில் குவிக்கப்படுகின் றனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

தென்னிலங்கையில் பல பகுதிகளிலிருந் தும் ஒன்று சேர்க்கப்பட்ட துருப்பினர் கட்டம் கட்டமாக வவுனியாவுக்கு நகர்த்தப்பட்டு வரு கின்றனர் என்று இணையத்தளம் ஒன்று தெரி வித்தது.

- இவ்வாறு நகர்த்தப்படும் படையினரில் கணிசமானோர் வவுனியாவில் உள்ள படை முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள அதே வேளை, குறிப்பிடத்தக்க அளவிலான படை யினர் முன்னரங்க நிலைகளுக்கு அனுப்பப் பட்டு வருகின்றனர் என்று தகவல்கள் கூறு கின்றன.

(04ஆம் பக்கம் பார்க்க)

## இடம்பெயர்ந்த சகல குடும்பங்களுக்கும் பங்கீட்டு அடிப்படையில் உணவுப் பொருள்

யாழ்ப்பாணம்,ஓக.21

குடாநாட்டில் இடம்பெயர்ந்த மற்றும் நிரந்தரமாக வசிக்கும் குடும்பங்களுக்கு பங் கீட்டு அடிப்படையில் உணவுப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

இடம்பெயர்ந்த மக்களுக்கு இலவசமாக வும் தமது நிரந்தர வதிவிடங்களில் வசிப் போருக்குப் பணத்துக்கும் உணவுப் பொருள் கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள் ளது.

ப.நோ.கூ.சங்கக் கிளைகள் ஊடாகவே உணவுப் பொருள் விநியோகம் மேற்கொள் ளப்படவுள்ளது.

இந்த நடைமுறைப்படி ஒரு லட்சத்து 75 ஆயிரத்து 591 குடும்பங்களுக்கு உணவு விநி யோகம் செய்யப்படும்.

கீழ் வரும் நடைமுறைப்படி விநியோகம் மேற்கொள்ளப்படும்.

(04ஆம் பக்கம் பார்க்க)

### ஐரோப்பிய ஒன்றியம் விதித்த தடை சரியான முடிவல்ல!

கொழும்பு, ஓக. 21

ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலி களைத் தடை செய்தது. ஓர் உசிதமான முடிவு அல்ல.

இலங்கைக்கான நோர்வேயின் விசேட தூதுவர் ஜோன் ஹன்ஸன் பௌவர் இப்படித் தெரிவித்திருக்கிறார்.

பி.பி.ஸி. செய்திச் சேவைக்கு வழங்கிய செவ்வி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரி வித்துள்ளார்.

இலங்கையில் அமைதியைக் கொண்டு

(04ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

## மகேந்திரன் மயில்வாகனம்

மகேந்திரன் மயில்வாகனம் அவர்கள் 20.08.2006 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் கிருபைமலரின் அன்புக் கணவரும் மயிலா, ஞானா ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (21.08.2006) திங்கட்கிழமை காலை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*66, சப்பல் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
**மயிலா தர்மராஜ்** (மகள்)

## திருமதி சிதம்பரப்பிள்ளை சிவகாமிப்பிள்ளை

நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் 18/8, கொண்டலடி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிதம்பரப்பிள்ளை சிவகாமிப்பிள்ளை 14.08.2006 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15.08.2006 செவ்வாய்க்கிழமை திருநெல்வேலி பாற்பண்ணை இந்து மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*18/8, கொண்டலடி வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*
*தொ.பே. 021 222 6091*

தகவல்:
**அ.உதயநாதன்**
(அப்பன் - மருமகன்)

## திருமதி நாகேஸ்வரி (இந்திராணி) இராசப்பா



சரவணை மேற்கு, வேலணையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், அன்னசத்திர ஒழுங்கை, கமானியா அவெனியுவை வசிப்பிடமாகவும் தற்பொழுது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி (இந்திராணி) இராசப்பா கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மூத்த தம்பி செல்லமுத்து அவர்களின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சுருவில் கோபாலப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*அன்னசத்திர லேன், 1ஆம் ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.*
*தொ.பே.0019054721967*

தகவல்:
**லதா** (மகள்)

## விசுவலிங்கம் கைலாயநாதன்



புங்குடுதீவு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும்பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட விசுவலிங்கம் கைலாயநாதன் 19.08.2006 இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம்-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - யோகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் ரதிதேவியின் அன்புக் கணவரும் புஸ்பவதி, கோசலாதேவி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் விமலதாசன் (கனடா), லண்டனில் வசிப்பவர்களான முருகதாஸ், பிறேமினி, முரளிதாஸ், தர்மினி ஆகியோரின் அன்புத் தந்தையும் உதிஸ்டா (கனடா), சுபாஜினி (லண்டன்), சுகுணகுமார் (லண்டன்), சுதர்ஜினி (கொழும்பு), சிவதீபன் (லண்டன்) ஆகியோரின் மாமனும் காலஞ்சென்றவர்களான ராதாகிருஷ்ணன், பரராசசிங்கம் (அருமை போசனசாலை, யாழ்ப்பாணம்) மற்றும் நடேசராசா (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் மாதுளா, மாதவன், அர்ஜூன், சுபிகன், சுபிகா, சுமேனன், வீஷ்மன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கு.சந்திரா (கிராம அலுவலர்)*
*699/2, கே.கே.எஸ். வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
**ப.புஸ்பவதி**
(சகோதரி)

## செல்லத்துரை செல்லம்மா



24/2, நக்காறோட், சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை செல்லம்மா காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா செல்லத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சின்னையா-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தையா-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் சதானந்தம், கோமதி (பிரான்ஸ்), நாகேஸ்வரி (ஜேர்மனி), உருத்திராணி (ஜேர்மனி), பரமேஸ்வரி, சற்குணேஸ்வரி, உதயகுமார் (கொலண்ட்), விஜயகுமார், ஜெயக்குமார், ராஜன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் செல்வராணி நவம் (பிரான்ஸ்), செல்வரட்ணம் (ஜேர்மனி), மகேந்திரராஜா (ஜேர்மனி), அப்பாத்துரை, சிவதாஸ், வதனா (கொலண்ட்), மலர், தேவி, நிமாலினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் சண்முகம், சிவானந்தம், பாக்கியம், வசந்தா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ராசாத்தி, நாகம்மா, தெய்வேந்திரம், சின்னத்தம்பி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2006) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**பிள்ளைகள்.**

# ஜே.வி.பி. மத்திய குழுவிலிருந்து நந்தன குணதிலக நீக்கப்பட்டார்!

ஜே.வி.பியின் மத்திய குழுவிலிருந்து களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நந்தன குணதிலக நீக்கப்பட்டுள்ளார்.

ஜே.வி.பியின் மூத்த உறுப்பினரான இவர் 1999 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பியின் வேட்பாளராகப் போட்டியிட்டார். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தலைவராகவும் நந்தன குணதிலக செயற்பட்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாணந்துறை ஒருங்கிணைப்பாளர் பொறுப்பை நந்தன குணதிலக ஏற்கவுள்ளதாலும் கட்சி விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாலும் அவரை மத்திய குழுவிலிருந்து நீக்கியுள்ளதாக ஜே.வி.பி. அறிவித்துள்ளது.

கடந்த சில வாரங்களுக்கு முன்னதாக மஹிந்த ராஜபக்ஷவை இரகசியமாகச் சந்தித்த நந்தன குணதிலக சில ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் தான் சுதந்திரக் கட்சியில் இணைவது குறித்து ஆலோசனை நடத்தியுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியிருந்தன.

ஜே.வி.பியை அரசில் இணைத்துக் கொள்வேன் என்று ஒரு பக்கம் பேச்சுகளை நடத்திக் கொண்டு மறுபக்கம் ஆள்பிடிக்கும் வேலையை மஹிந்த தொடர்ந்து மேற்கொள்வதால் அவர் மீது ஜே.வி.பி. அதிருப்தி அடைந்துள்ளதாகவும் தெரிகிறது. (த)

# வவுனியாவில் கிளைமோர் பொலிஸ் அலுவலர் காயம்

வவுனியா, ஓக.21

வவுனியா - மன்னார் வீதியில் உள்ள சாளம்பைக்குளம் பகுதியில் நேற்றுக் காலை 7.30 மணியளவில் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் பொலிஸ் அலுவலர் ஒருவர் காயமடைந்தார். துவிச்சக்கர வண்டி ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த கிளைமோரே வெடித்தது என்று தெரிவிக்கப்பட்டது. வீதி ரோந்தில் ஈடுபட்ட பொலிஸாரை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

காயமடைந்த பொலிஸ் அலுவலர் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (த)


## உடனடித் தேவை

கீழ்க்காணும் பொருள்களை வைத்திருப்போர் விற்பனை செய்ய விரும்புகிறீர்களா? உடன் நேரில் வாருங்கள்.

★ டிஜிற்றல் கமெரா
★ கசட் றேடியோ
(மின்சாரம் மற்றும் பற்றறியில் இயங்கக்கூடியது)

**உதயன் மனிதவள சேவை**
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


## யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

*மேற்படி சங்கத்தின் அங்கத்தவர்கள் அனைவரையும் இன்று (21.08.2006) திங்கட்கிழமை எமது தொழில் நிலைபற்றி ஆராய்வதற்காக ஊரடங்குச்சட்டம் தளர்த்தப்பட்டு ஒரு மணித்தியாலயத்திற்குள் ஒன்றுகூடுமாறு கேட்டுக்கொள்கிறோம்.*

- செயலாளர்.

உ
சிவமயம்

## கொழும்புத்துறை மேற்கு ஸ்ரீவதரிபீட விநாயகர் ஆலய நிர்வாக சபையின் அறிவித்தல்

*கொழும்புத்துறை மேற்கு இலந்தைக்குளம் பிள்ளையார் கோவிலில் 27.08.2006இல் நடைபெறவிருந்த மகா கும்பாபிஷேகம் நாட்டில் எழுந்துள்ள அசாதாரண நிலை காரணமாக பிற்போடப்பட்டுள்ளது. புதிய திகதி பின் அறிவிக்கப்படும்.*

ஆலய நிர்வாக சபை.

யா/ ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயம்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஆசிரிய சேவையில் 38 வருடங்களைப் பூர்த்திசெய்து எமது வித்தியாலயத்தில் ஆசிரியராய், உபஅதிபராய் பதினாறரை வருடங்கள் அரும்பெரும் சேவையாற்றி 22.08.2006இல் ஓய்வுபெறும்

**திருமதி கமலராணி சிவானந்தன்**

அவர்களின் கல்விச் சேவையினை எம் பள்ளிச் சமூகம் பாராட்டி வாழ்த்துகின்றது.

ஓய்வுக் காலம் வளம்பெற நல்வாழ்த்துக்கள்.

யா/ஆனைப்பந்தி மெ.மி.வி.

பள்ளிச் சமூகம்

## கண்ணீர் அஞ்சலி



17.08.2006 வியாழக்கிழமை அகாலமரணம் அடைந்த சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் றோட், இருபாலையை வசிப்பிடமாகக் கொண்டவருமான

**இராஜநாயகம் சுரேஸ்குமார் (சனா)**

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*கோப்பாய், இருபாலை.*

நண்பர்கள்.

## கண்ணீர் அஞ்சலி

சாவகச்சேரி தவில் வித்துவான் நடராஜசுந்தரம் அவர்களின் மகனும் தவில் மேதை இணுவில் N.R.சின்னராஜா அவர்களின் மருமகனுமாகிய

**கேதீஸ்வரன்** (பொறியியலாளர்)

ஆஸ்திரேலியாவில் காலமானார். அவரது மறைவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு கண்ணீரை காணிக்கையாக்குகிறோம்.

N.R.சின்னராஜா ரவீந்திரன்
தவில் வித்துவான், இணுவில்.


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

806 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

இடபம்

**12 13 40 44**

18-08-2006

செல்லுபடியாகும் தொடர் இல. 5351035 - 5366003

ஜக்பொட் பரிசு ரூபா.5,885,175/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 331,536 | 10/- | 3,315,360/- |
| 2 இலக்கங்கள் | 30,547 | 20/- | 610,940/- |
| 1 இல. + லக்கினம் | 30,224 | 30/- | 906,720/- |
| 2 இல. + லக்கினம் | 2,701 | 100/- | 270,100/- |
| 3 இலக்கங்கள் | 805 | 500/- | 402,500/- |
| 3 இல. + லக்கினம் | 77 | 5,000/- | 385,000/- |
| 4 இலக்கங்கள் | 05 | 100,000/- | 500,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 5,885,175/- | - |
| மொத்தம் | | | 6,390,620/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 395,900 | | 7,414,120/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 6,255,625/-

தொடர் இல.4470954 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2006 ஆகஸ்ட் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைகேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மொனராகலை | 5362168-4-14 |
| காலி | 5358972-1-92 |
| அம்பாறை | 5355271-5-21 |
| கம்பஹா | 5351383-0-69 |
| அனுராதபுரம் | 5356950-1-86 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# சர்வதேச சமூகமும் இப்போது ஈழத் தமிழர்களுக்காகக் குரல்

அரச படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள யாழ்ப்பாணம் மற்றும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பிரதேசங்கள் போன்றவற்றுக்கான போக்குவரத்துத் தடைப்பட்டு இன்றுடன் பத்து நாட்களாகிவிட்டன.

அத்தியாவசிய உணவுப் பொருள்கள், மருந்துப் பொருள்கள், எரிபொருட்கள் இல்லாமல் தமிழர் தாயகத்தில் பெரும் மனிதாபிமானப் பிரச்சினை எழுந்திருக்கின்றது. பல லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

அரச படைகளின் கட்டுப்பாட்டில் இருப்பதாகக் கூறப்படும் குடாநாட்டுப் பகுதிகளில்தான் இந்த நிலைமை மிக மோசம்.

ஒரு புறம் யுத்த பீதி; இராணுவ நடவடிக்கை நெருக்கடி. மறு புறம் வரையறையற்ற ஊரடங்கு. அது தளர்த்தப்படும் நேரத்தில் கூட பாதுகாப்பான இடங்களுக்கு மக்கள் இடம் பெயர முடியாத இக்கட்டு; கட்டுப்பாடு; தடை விதிப்பு.

யுத்தத்தின் நடுவில் சிக்காமல் தவிர்ப்பதற்காக குடாநாட்டுக்கு உள்ளேயே இடம்பெயர முயலும் மக்களைத் தடுப்பது அவர்களை மனிதக் கேடயமாகப் பயன்படுத்தும் உத்தியேயன்றி வேறில்லை.

இந்தப் பின்னணியில்தான் இந்த மக்களின் மனிதாபிமானப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்கும்படி கோரும் - வலியுறுத்தும் - அழுத்தம் சர்வதேச சமூகத்திடமிருந்து இலங்கை அரசுத் தலைமைக்கு வந்திருப்பதாகத் தெரிகின்றது.

இலங்கைப் பிணக்கில் நேரடியாகச் சம்பந்தப்பட்ட தரப்புகள் இரண்டு. ஒன்று - இலங்கை அரசு. மற்றது - தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம்.

இந்த இரண்டு தரப்புகளில் சட்டபூர்வமான அரசு எனத் தன்னைக் கூறுகின்ற - கூறிக் கொள்கின்ற - இலங்கை அரசுக்கு, அதன் காரணமாக இவ்விடயத்தில் பொறுப்புகளும், கடமைகளும் அதிகம். அதையே இலங்கை அரசுக்கு இந்த நெருக்கடிக் கட்டத்தில் விரைந்து வந்து நினைப்பூட்டியிருக்கின்றது சர்வதேச சமூகம்.

கடந்த புதனன்று ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் கொபி அனான், நேரடியாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குத் தொலைபேசி அழைப்பு எடுத்து சுமார் இருபத்தியைந்து நிமிட நேரம் இவ்விடயம் குறித்துப் பேசியிருக்கின்றார்.

வடக்கு, கிழக்கில் யுத்தம் ஒரு புறம் இருக்க, அங்கு ஒன்றும் அறியாத அப்பாவிப் பொதுமக்கள் பாதிக்கப்படும் பெரும் மனிதாபிமானப் பிரச்சினை எழுந்திருப்பதை வேதனையுடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஐ.நா. செயலாளர் நாயகம் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

''பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரரணப் பணிகள் விரைந்து மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்கு வசதியாக அவ்விடங்களுக்கு ஐ.நா. நிவாரணப் பணியாளர்கள் செல்வதற்கான தடைகளையும், கட்டுப்பாடுகளையும் நீக்குங்கள்.'' - என்று இலங்கை ஜனாதிபதியிடம் ஐ.நா. செயலாளர் நாயகம் கேட்டிருக்கின்றார்.

அது போலவே, இலங்கையில் யுத்த நெருக்கடி தீவிரமடைந்ததை அடுத்து அமெரிக்காவும் தனது விசேட பிரதிநிதி ஒருவரை உண்மை நிலையைக் கண்டறிவதற்காக நேரில் கொழும்புக்கு அனுப்பியிருக்கின்றது. அமெரிக்க இராஜாங்க அமைச்சின் பிரதம பிரதி உதவிச் செயலாளர் ஸ்டீவ் மானே அமெரிக்க அரசினால் இந்த விவகாரத்துக்கென தனியாக - விசேடமாக - அனுப்பப்பட்டிருந்தார்.

அமெரிக்காவிலிருந்து நேரடியாகக் கொழும்பு வந்த அவர், இங்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் சுமார் இரண்டு மணி நேரம் வடக்கு - கிழக்கு நிலைமைகள் குறித்து விரிவாகப் பேசினார். இங்கு வேறு சில முக்கியஸ்தர்களையும் சந்தித்துக் கொண்டு புஷ் நிர்வாகத்துக்கு இலங்கை நிலைமை குறித்து விளக்குவதற்காக மீண்டும் அமெரிக்கா விரைந்தார் அவர்.

வடக்கு, கிழக்கில் பெரும் மனிதாபிமானப் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் மக்களின் - குறிப்பாகக் குடாநாட்டு மக்களின் - அத்தியாவசியப் பிரச்சினைகளை விரைந்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஸ்டீவ் மானும் இலங்கை ஜனாதிபதியை நேரடியாக வற்புறுத்தினார் என்று தெரிகின்றது.

அப்பாவி மக்கள், தொண்டர் நிறுவனப் பணியாளர்கள் போன்றோருக்கு எதிராக இழைக்கப்படுவதாகக் கூறப்படும் வன்முறைகள் குறித்து நியாயமான - வெளிப்படையான - திறந்த - விசாரணைகளை நடத்தவும், குற்றமிழைத்தோருக்கு எதிராக நீதி நியாயமான சட்ட நடவடிக்கைகளை எடுக்கவும் அரசை அவர் வலியுறுத்தினார் என்றும் கூறப்பட்டது.

இதேவேளை, கடந்த வாரம் இலங்கை அரசின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவைச் சந்தித்த - இலங்கையில் உள்ள - வெளிநாட்டுத் தூதரகங்களின் இராஜதந்திரிகளும் சர்வதேச தொண்டர் அமைப்புகளின் உயர் பிரதிநிதிகளும் யுத்தத்தால் தமிழர் தாயகத்தில் மனிதப் பேரவலத்துக்கு இலக்காகியிருக்கும் அப்பாவி மக்களின் துயரங்கள், கஷ்டங்களைக் களைய விரைந்து நடவடிக்கை எடுக்கும்படி அவரையும், அவரது அரசையும் வற்புறுத்தினர் என அறியவந்தது.

இப்பகுதிகளில் வெளிநாட்டுத் தொண்டு நிறுவனப் பணியாளர்கள் நேரில் சென்று தமது கடமைகளை ஆற்றுவதற்கு அரசுத் தரப்பு முழு ஒத்துழைப்பும், அனுமதியும் வழங்க வேண்டும் என்றும் அவர்கள் நேரடியாகவே அமைச்சர் மங்களவிடம் வற்புறுத்தித் தெரிவித்தனர் என்றும் கூறப்பட்டது.

தமிழர் தாயகத்தில் நெருக்கடிகளை எதிர்கொண்டு நிற்கும் அப்பாவித் தமிழர்களுக்காகத் தமிழகமும் ஆவேசத்தோடு கொதித்துப் போய்க் குரல் எழுப்பி நிற்கின்றது.

ஈழத் தமிழர்கள் இப்போது தனிமைப்படுத்தப்பட்டவர்கள் அல்லர். அவர்களுக்காகக் குரல் எழுப்ப சர்வதேச சமூகமும் தயாராகி வருகிறது.

யுத்த பீதிகுள் சிக்கித் தள்ளாடும் நமது மக்களுக்கு ஓரளவிலேனும் ஆறுதல் அளிக்கும் நிலைமை இது.

## பதில் துணைவேந்தர் அறிவிப்பு

# பல்கலையில் நடந்த தேடுதலின்போது ஆயுதங்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை

## நினைவுத் தூபி சேதப்படுத்தப்பட்டிருக்கிறது

யாழ்ப்பாணம்,ஓக.21

யாழ்.பல்கலைக்கழகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை படையினர் நடத்திய சுற்றிவளைப்புத் தேடுதலின் போது, அங்கிருந்து வெடிபொருள்கள் கைப்பற்றப்பட்டதாக வெளியான செய்தி உண்மைக்குப் புறம்பானது - என்று பதில் துணை வேந்தர் பேராசிரியர் ஆர்.குமாரவடிவேல் அறிவித்துள்ளார்.

குறிப்பிட்ட தேடுதலின் போது வெடிபொருள்களோ வேறு எந்தவகையான ஆயுதங்களோ அங்கிருந்து கைப்பற்றப்படவில்லை என்றும் -

அரச ஊடகம் ஊடகம் ஒன்றில் ஒலிபரப்பப்பட்ட செய்தி உண்மைக்கு முற்றிலும் புறம்பானது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

யாழ்.பல்கலைக்கழகத்தினுள் ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக ஏற்கனவே நடத்தப்பட்டுவந்த பிரசாரத்தை படையினர் நடத்திய தேடுதல் பொய்ப்பித்துள்ளது என்றும் -

பதில் துணைவேந்தர் விடுத்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவித்துள்ளார்.

தேடுதல் நடத்தப்பட்ட மறுதினமான சனிக்கிழமை பல்கலைக்கழகம் சென்ற போது வளாகத்தில் அமைந்துள்ள உயிர்த்தியாகம் செய்தோருக்கான நினைவுத் தூபி சேதப்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

உணர்வுகளைத் தூண்டும் இவ்வாறான செயற்பாடுகள் கண்டனத் துக்குரியதும், கவலைக் குரியதுமாகும். இத்தகைய நடவடிக்கைகள், நல்லெண்ணத்தை வளர்த்து நல்லிணக்கத்தைக் காண உதவ மாட்டாது - என்றும் பதில் துணைவேந்தர் மேலும் தெரிவித்துள்ளார்.

# செஞ்சிலுவை பணியாளரை பணிக்குத் திரும்ப அழைப்பு

யாழ்ப்பாணம்,ஓக.21

செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையில் பணிபுரியும் ஊழியர்கள் மற்றும் சுகாதாரத் தொண்டர்களை உடன் அலுவலகத்துக்கு வருமாறு யாழ்.கிளைத் தலைவர் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் கேட்டுள்ளார்.

ஊரடங்கு நீக்கப்பட்டவுடன் அவர்களை சமுகமளிக்குமாறும் அவர் கேட்டுள்ளார். (1)

# தீவகத்தில் காயங்களுடன் மீட்கப்பட்ட ஐவர் விளக்க மறியல் உத்தரவுடன் ஆஸ்பத்திரியில்!

## சிறைக்காவலரின் பாதுகாப்புடன் சிகிச்சைபெற நீதிமன்று அனுமதி

யாழ்ப்பாணம்,ஓக.21

அல்லைப்பிட்டி, மண்கும்பான் ஆகிய பகுதிகளில் மீட்கப்பட்ட ஐவர், விளக்கமறியல் உத்தரவுடன் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ஊர்காவற்றுறை தேவாலயத்தில் தங்கியிருந்தவர்களில் சிறு காயங்களுடன் இருந்த சிலர் யாழ்.ஆஸ்பத்திரிக்கு அழைத்து வரப்பட்டனர்.

அவர்களில் 4 இளைஞர்களையும் ஒரு யுவதியையும் யாழ்ப்பாணம் வருகை தருவதற்கு படையினர் அனுமதிக்கவில்லை.

அவர்கள் மீது சந்தேகம் இருப்பதாகப் படையினர் தெரிவித்ததையடுத்து, அவர்களை எதிர்வரும் 31ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கும் படியும் -

சிறைக் காவலர்களின் பாதுகாப்புடன் அவர்களுக்கு சிகிச்சை அளிக்கும்படியும் -

யாழ்.மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் உத்தரவிட்டுள்ளார். (1)

# அத்தியாவசிய தேவைகளின் பணிகளில் ஒழுங்கமைப்பு

## யாழ்.மாவட்ட செயலகம் அறிவிப்பு

யாழப்பாணம், ஓக 21

யாழ்.மாவட்டத்தின் தற்போதைய சூழ்நிலையை அடுத்து மாவட்டச் செயலகத்தில் அத்தியாவசிய தேவைகளுக்கான பணிகளில் ஒழுங்கமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஸ் அறிவித்துள்ளார்.

இதன்படி உணவு விநியோகம், எரிபொருள், மின்சாரம், போக்குவரத்து, வெளிமாவட்டத்தில் இருந்து யாழ்.வந்துள்ள அரச அலுவலர்களின் வரவு பதிதல், நிலவர அறிக்கை தயாரித்து அன்றாடம் அனுப்புதல், யாழ்.மாவட்டத்திற்கு பல்வேறு தேவைகளுக்காக வந்து உரிய இடங்களுக்கு செல்ல இயலாமல் தங்கி இருப்போர் தொடர்பான பதிவு, ஒருங்கமைப்புக் கூட்டங்கள் ஒழுங்கு செய்தல், அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பான செயற்பாடுகள் மேற்கொள்ளல், ஊரடங்கு அனுமதிப்பத்திரம் வழங்கல் எனப் பணிகள் ஒழுங்கமைக்கப்பட்டிருப்பதுடன் -

அவற்றை நிறைவேற்றுவதற்கென பொறுப்பு அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் தொலைபேசி இணைப்புகளும் அறிவிக்கப்பட்டுள்ளன.

அத்தியாவசியப் பணிகளுக்கான தொலைபேசி இலக்கங்களின் விவரம் வருமாறு:-

உணவு விநியோகம் (222 2774), எரிபொருள் (222 2398), மின்சாரம், போக்குவரத்து (222 3789), வெளி மாவட்டத்திலிருந்து இங்கு வந்துள்ள அரச அலுவலர் வரவு பதிதல் (222 2775), நிலவர அறிக்கை தயாரித்தல் (222 7921) பல்வேறு தேவைகளுக்காக வந்து உரிய இடங்களுக்கு திரும்பிச் செல்லாமல் இருப்போரின் பதிவு (222 2427).

# யாழ்.வலய நிதிப்பிரிவு ஊழியருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,ஓக.21

இன்று ஊரடங்கு தளர்த்தப்படும் வேளையில் யாழ்.கல்வி வலயத்தின் நிதிப்பிரிவு ஊழியர்களை இயலுமான வரை கடமைக்குச் சமுகந்தருமாறு அலுவலகக் கணக்காளர் கேட்டுள்ளார்.

இதேவேளை -

நாளை செவ்வாய்க்கிழமை ஊரடங்கு தளர்த்தப்படும் வேளையில் ஆசிரியர்களுக்கான சம்பளப் பட்டியலை பாடசாலை அதிபர்கள் பெறக்கூடியதாக இருக்கும் என்றும் கல்வி வலய வட்டாரங்கள் தெரிவித்தன.

# கல்வி நிலைகள் தாக்கப்படுவதை நிறுத்த சர்வதேச சமூகத்தின் நடவடிக்கை தேவை

## வன்னி அதிபர் சங்கங்கள் வலியுறுத்து

கிளிநொச்சி,ஓக.21

தமிழ்க் கல்வி நிலையங்களை இலக்கு வைத்து இலங்கை இராணுவத்தினர் நடத்திவரும் தாக்குதல்களை உடனடியாகத் தடுத்து நிறுத்த சர்வதேச சமூகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வன்னியில் உள்ள அதிபர்கள் சங்கங்கள் வலியுறுத்தியுள்ளன.

முல்லைத்தீவில் செஞ்சோலைச் சிறுவர் இல்லத்தின் மீது நடத்தப்பட்ட விமானக் குண்டு வீச்சில் 55 பேர் உயிரிழந்த சம்பவத்தைத் தொடர்ந்து அதிபர் சங்கங்கள் இந்தக் கோரிக்கையைச் சமர்ப்பித்துள்ளன.

யுனிசெவ் அமைப்பின் கிளிநொச்சி மாவட்டப் பிரதிநிதி, பெனி புரூனை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை சந்தித்துப் பேசிய முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்ட அதிபர்கள் சங்கங்களின் செயலாளர்கள் இந்தக் கோரிக்கையை விடுத்தனர்.

விமானக் குண்டு வீச்சு இடம்பெற்ற சமயம் செஞ்சோலைச் சிறுவர் இல்லத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்த வதிவிடப் பயிற்சி நிகழ்வை இந்தச் சங்கங்களே ஏற்பாடு செய்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. பெண்களுக்கான அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வுக்கான நிலையத்தின் நிதி உதவியிலேயே இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ம)

# கப்பல் பயணத்துக்கு இதுவரை 5 ஆயிரம் பேர் பதிவு

யாழ்ப்பாணம்,ஓக.21

குடாநாட்டில் இருந்து வெளிமாவட்டங்களுக்குக் கப்பலில் செல்ல நேற்று மாலைவரை 5 ஆயிரம் பேர் தமது விவரங்களை யாழ். செயலகத்தில் பதிவு செய்துள்ளனர்.

செயலகத்தில் இயங்கும் விசேட கருமபீடத்தில் இந்தப் பதிவு வேலைகள் இடம்பெற்றுவருகின்றன. (1)

# சமைப்பதற்கு பாத்திரம் இல்லை நலன்புரி நிலையங்களில் அவதி!

கரவெட்டி,ஓக.21

தென்மராட்சியில் இருந்து அகதிகள் தொடர்ந்து வடமராட்சிக்கு இடம் பெயர்ந்துகொண்டிருக்கின்றனர்.

ஊரடங்கு நேற்று நீக்கப்பட்டவேளை 95பேர் வடமராட்சியை வந்தடைந்தனர். அவர்கள் நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே, இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள 345 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 250 பேரும் உணவுப் பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளனர்.

உலர் உணவுகள் பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்டபோதும், சமையல் பாத்திரங்கள் இன்றி அவர்கள் உணவைச் [illegible] நிலையில் உள்ளனர்.

நலன்புரி நிலையங்களுக்கு [illegible]மாக வாழ்பவர்கள் இடம்பெயர்ந்து வந்த மக்களுக்கு பாத்திரங்களை வழங்கியுள்ளனர்.

சமையல் பாத்திரங்களை வழங்குமாறு தொண்டு நிறுவனங்களிடம் அவர்கள் கோருகின்றனர்.

# வைத்தியசாலைப் பணியாளரை உடன் கடமைக்கு திரும்பப் பணிப்பு

## மாகாண சுகாதாரப் பணிப்பாளர் அழைப்பு

யாழ்ப்பாணம்,ஓக.21

யாழ்.சுகாதாரத் திணைக்களம் மற்றும் அதன் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளின் பணியாளர்களை உடன் கடமைக்குச் சமூகம் தருமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ. கேதீஸ்வரன் கேட்டுள்ளார்.

ஊரடங்கு வேளைகளிலும் சுகாதாரத் திணைக்களம் வழங்கியுள்ள அடையாள அட்டையுடன் பணியாளர்கள் வேலைக்கு சமூகமளிக்கமுடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளின் அதிகாரிகளை ஊரடங்கு நீக்கப்பட்டவுடன் சுகாதாரத் திணைக்களத்துக்கு சமுகமளிக்கும்படியும் அவர் கேட்டுள்ளார். (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊரடங்கு தளர்த்தப்படும் நேரங்களில் அரச ஊழியர் கடமைக்கு திரும்பவேண்டும்

யாழ்ப்பாணம்,ஓக.21

ஊரடங்கு தளர்த்தப்படும் நேரத்தில் சகல அரச ஊழியர்களும் கடமைக்குச் சமூகமளிக்க வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் வேலையில் இருந்து விலகியவர்களாகக் கருதப்படுவர்.

இப்படி கண்டிப்பான உத்தரவு ஒன்றை யாழ். அரச அதிபர் கே.கணேஷ் நேற்று விடுத்துள்ளார்.

குடாநாட்டில் பணிபுரியும் பிரதேச செயலர் மற்றும் உதவி அரச அதிபர்களுக்கு இது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது.

அவர் விடுத்துள்ள அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அரச ஊழியர்கள் சகலரும் உடனடியாக தாங்கள் தங்கியுள்ள இடத்திற்குச் சமீபமாகவுள்ள பிரதேச செயலகங்களுக்கு ஊரடங்கு தளர்த்தப்படும் நேரத்தில் சமூகமளிக்கவேண்டும். அவ்வாறு கடமையாற்றும்போது தமது பெயர் விவரம், தொலைபேசி இலக்கம் ஆகியவற்றை மாவட்டச் செயலக நிர்வாக அதிகாரிக்குத் தெரியப்படுத்தவேண்டும்.

கிராமசேவையாளர்கள், பிரதேச செயலர்கள் தமது அலுவலகங்களை வாரத்தில் 7 நாள்களும் ஊரடங்கு நீக்கப்படும் நேரத்தில் திறந்து பணியாற்ற வேண்டும்.

ஏனைய அரச ஊழியர்கள் தமது வதிவிடங்களுக்கு அருகில் உள்ள பிரதேச செயலகங்களுக்குச் சென்று பணியாற்ற வேண்டும்.

பிரதேச செயலர்கள் தமது உத்தியோக பூர்வ வாகனத்தையும், சாரதியையும் தம்முடன் வைத்திருக்க அனுமதிக்கப்படுகின்றனர்.

கடமைக்குச் சமூகமளிக்காத ஊழியர்கள் கடமையில் இருந்து நீங்கியவர்களாகக் கருதப்படுவர் - என்று அரச அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (1)

# ஊரடங்கு தளர்த்தப்பட்டதை அடுத்து வீதிக்கு வந்த மக்களுக்கு நேர்ந்த கதி

## சுமார் 20 நிமிடத்தின் பின்னரே பயணத்துக்கு அனுமதி

யாழ்ப்பாணம்,ஓக.21

ஊரடங்கு தளர்த்தப்பட்டுள்ளதாக வானொலியில் செய்தி வெளியாகியதை அடுத்து வீதிக்கு வந்த பொதுமக்களை, ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படவில்லை -

மீண்டும் அமுல்படுத்தப்பட்டுள்ளது என்று கூறிப் படையினர் திருப்பி அனுப்பினர். இவ்வாறு பல இடங்களிலும் குறிப்பாக யாழ். நகரப் பகுதியில் மக்கள் அலைக்கழிக்கப்பட்டனர்.

குடா நாட்டில் தொடர்ச்சியாக அமுல்படுத்தப்பட்டுவரும் ஊரடங்குச் சட்டம் நேற்றுக் காலை 10 மணிமுதல் பிற்பகல் 3 மணி வரை தளர்த்தப்படுவதாக பலாலி வானொலி சேவையில் அறிவிக்கப்பட்டது.

இதனை அடுத்து, முற்பகல் 10 மணியளவில் அத்தியாவசிய பொருள், எரிபொருள் கொள்வனவு மற்றும் இன்னோரன்ன தேவைகளை நிறைவேற்றுவதற்காக பொதுமக்கள் முண்டியடித்துக்கொண்டு வீதிகளுக்கு வந்தனர். அவர்களை இடைமறித்த படையினர், ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படவில்லை என்றும் -

உடனடியாக வீட்டுக்குத் திரும்புமாறும் - கடும் தொனியில் எச்சரித்தனராம்.

யாழ்.கே.கே.எஸ். வீதியின் முக்கிய சந்திகளில் நின்ற சீருடையினரின் இத்தகைய நடவடிக்கைகளால், பொதுமக்கள் முண்டியடித்துக்கொண்டு நாலாபுறமும் சிதறி ஓடினர். பின்னர் ஒழுங்கைகளிலும், வீட்டு வாயில்களிலும் கூடிநின்று என்ன செய்வதென்று தெரியாமல் அங்கலாய்த்ததை அவதானிக்க முடிந்தது.

ஊரடங்கு தளர்த்தப்பட்டு சுமார் 20 நிமிடங்களின் பின்னர் அதாவது 10.20 மணிக்கே பொதுமக்களை வீதிகளில் பயணம் செய்ய படையினர் அனுமதித்தனர்.

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கில் முகமாலை, கிளாலி பகுதிகளில் குவிந்துள்ள புலிகளின் பலத்தை உடைப்பதற்காக தெற்கே வவுனியாவில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியினுள் அரசுப் படைகள் புதிய போர்முனை ஒன்றை திறக்கக்கூடும் என்று இரா ணுவ ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

விநியோகங்கள் தடுக்கப்பட்டுள்ள தற்போதைய நெருக்கடியான நிலையில் வட போர் முனையில் புலிகளைப் பலவீனப்படுத்துவதற்காக தெற்கு முனையில் - வவுனியா பகுதியிலிருந்து - ஒரு படை நடவடிக்கையை ஆரம்பிப்பது பற்றி அரசுப் படைகள் பரிசீலிக்கலாம்.

இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார் இந்தியாவின் ஓய்வு பெற்ற இராணுவப் புலனாய்வு நிபுணர் கேணல் ஆர்.ஹரிகரன்.

வடக்கில் பலாலி மீதும், கிழக் கில் திருமலைத் தளம் மீதும் புலிகள் தாக்குதல் நடத்திப் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி இருப்பதால் அரசுப்படை நடவடிக்கைகள் பெரும் அழுத்தத்தை எதிர்கொள்கின்றன. இராணுவம் அதன் விநியோகங்களுக்கு மாற்று வழிகளை ஏற்படுத்தவேண்டிய அவசியம்உருவாகியுள்ளது.

இதற்கு இரண்டு வழிகள் உள்ளன,

மூதூரிலுள்ள விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தைக் கைப்பற்றித் திருகோண மலைத் துறைமுகத்தைக் காப்பாற்றி அங்கிருந்து விநியோகங்களை ஆரம்பித்தல் - முதலாவது வழி முறை.

வடக்கில் புலிகளின் பலத்தை உடைத்து - அவர்களைப் பலவீனப் படுத்த - ஒரு புதிய படை நடவடிக் கையை - தெற்கே வவுனியா பகுதியிலிருந்து ஆரம்பித்தல் - இது இரண்டாவது தெரிவு - என்று கேணல் ஹரிகரன் தெரிவித்திருக்கிறார்.

இலங்கையில் இந்திய அமைதிப் படை நிலைகொண்டிருந்த போது அதன் புலனாய்வுப் பிரிவுக்குப் பொறுப்பாகச் செயற்பட்டவர் கேணல் ஹரிகரன்.

இலங்கையில் தற்போது நடை பெறும் சண்டைகள் தொடர்பான தனது மதிப்பீடு ஒன்றில் மேற்படி கருத்துக்களை அவர் வெளியிட்டிருக்கிறார். (ஐ)

## ஐரோப்பிய..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரும் முயற்சியில் நோர்வே முன்னணியில் நிற்கிறது. ஆனால், இன்று நோர்வேகூட மிகவும் நம்பிக்கையற்ற விதத்தில் காணப்படுகின்றது.

விடுதலைப்புலிகளைத் தீவிரவாத இயக்கம் என வகுத்த ஐரோப்பிய ஒன்றியத்தின் சமீபத்திய முடிவு, விடுதலைப் புலிகளின் நிலைப்பட்டைத் தீவிரமாக்கியுள்ளது - என்று ஹன்ஸன் போவர். அந்தச் செவ்வியில் கூறியிருக்கின்றார். (ஐ - 12)

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆபிரிக்கா அணிகளுடன் இணைந்து முத்தரப்பு தொடரில் பங்கேற்க இந்திய அணி இலங்கை வந்தது. கொழும்பில் கண்ணி வெடித் தாக்குதல் நடத்தப்பட, பாதுகாப்பை காரணம் காட்டி தென் ஆபிரிக்கா தொடரிலிருந்து விலகியது. ஆனால், இந்திய அணி தொடர்ந்து விளையாடும் என அறிவிக்கப்பட்டது தெரிந்ததே. (ஐ)

## வட யுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ளிக்கிழமை காலை முதல் இந்தப் பகுதிகளில் இருதரப்பினரிடையேயும் கடும் சண்டை இடம்பெற்றதாகத் தெரிகிறது. அன்று மாலை தாண்டி இரவு வரை நீடித்த மோதல் களில் இராணுவத் தரப்பில் 28சிப்பாய்கள் வரை உயிரிழந்தனர் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. அதன் பின்னர் சனிக்கிழமை காலை பரஸ்பரம் ஷெல், மற்றும் பீரங்கித் தாக்குதல்களை இருதரப்பும் மேற்கொண்டன. அதன்பிறகு போர் முனையில் இனம் புரியாத அமைதிநிலை நீடித்தது.

இரண்டு தரப்புகளும் அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்குத் தங்களைத் தயார்ப்படுத்துவதற்கான இடைவெளியாக இது இருக்கக் கூடும் என்று கருதப்பட்டது.

அரசுப் படைகள் அப்பகுதியில் வலிந்து தாக்கும் முயற்சிகளில் ஈடுபடாததால் தமது போராளிகள் எதிர்த் தாக்குதல்களை நடத்த வேண்டிய அவசியம் எழவில்லை. இதனாலேயே அமைதிநிலை காணப்படுகிறது என்று விடுதலைப் புலிகளின் இராணுப் பேச்சாளர் இளந்திரையன் தெரிவித்தார்.

இதேவேளை-

தொடர்ச்சியாக புலிகளின் ஷெல் வீச்சுக்கு இலக்காகி வந்த பலாலி விமானத் தளத்தில் இராணுவ விமானம் ஒன்று தரையிறங்கிச் சென்றிருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி 'சண்டே ரைம்ஸ்' தெரிவித்தது.

பொருள்களை ஏற்றிச் சென்ற விமானம் ஒன்று கடந்த புதனன்று பலாலி விமானத் தளத்தில் பத்திரமாக தரையிறங்கியது என்றும், விமானம் தரையிறங்கிய வேளை அங்கு ஹெலிக்கொப்டர்கள் அதற்குப் பாதுகாப்பு வழங்கின என்றும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

கடந்த 11ஆம் திகதி சண்டை மூண்டது முதல் பலாலி படை முகாமுடனான ஆகாய வழித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டன. விமானங்கள் அங்கு தரையிறங்குவது தடைப்பட்டது. இரவு வேளைகளில் ஹெலிக்கொப்டர்கள் மட்டும் அங்கு தரையிறங்கி வந்தது. (ஐ)

## கப்பல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரணமாக கப்பல் வருகை தாமதமாகும் என நேற்றிரவு தெரிவிக்கப்பட்டது.

குடாநாட்டு மக்களுக்கான அத்தியாவசியப் பொருள்களுடன் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வழித்துணையுடன் கப்பல் ஒன்று நாளை வடக்கு நோக்கிப் புறப்படவிருந்தது. கொழும்பில் தொடரும் மழை காரணமாக கப்பலில் பொருள்கள் ஏற்றுவதில் தடங்கல் ஏற்பட்டுள்ளது என்றும் -

கப்பல் தாமதமாகவே புறப்படும் என்றும் - அரச அதிபர் கே.கணேஷ் நேற்றிரவு தெரிவித்தார்.

## கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலை மேற்கொண்டதால் நேற்றுமுன்தினம் இரவு மட்டக்களப்பு மாவட்டம்எங்கும் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

வவுணதீவு, கொம்மாதுறை, முறக்கொட்டாஞ்சேனை, கும்புறுமூலை, வாழைச்சேனை ஆகிய படைமுகாம்களில் இருந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை நோக்கி சமகாலத்தில் ஆட்லறித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதால் மக்கள் மத்தியில் பெரும் அச்சம் ஏற்பட்டது.

ஓட்டமாவடி, வாழைச்சேனை, ஏறாவூர் மற்றும் காத்தான்குடி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்களும் பெரும் அச்சத்துடன் காணப்பட்டனர்.

இரவு 7.15மணி தொடக்கம் 10.30மணி வரை இடையிடையே இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. எனினும் இரண்டு தரப்பினருக்கும் ஏற்பட்ட சேதவிபரங்கள் அறிவிக்கப்படவில்லை. தாக்குதல் சம்பவம் இடம்பெற்ற வேளை மின்சாரத் தடையும் ஏற்பட்டதால் பதற்றம் மேலும் அதிகரித்தது.

இந்த ஷெல் தாக்குதல்களால் ஏற்பட்ட சேதவிவரங்கள் அரசு மற்றும் புலிகள் தரப்பில் இருந்து உடனடியாக வெளியிடப்படவில்லை.

## இலங்கைத் தூதரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றப்பட்டது. இது குறித்து சென்னையில் உள்ள இலங்கைத் தூதுவர் கூறுகையில் 'திரித்துக் கூறப்பட்ட செய்திகளின் அடிப்படையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.'' என்று குறிப்பிட்டார். இதற்குத் திருமாவளவன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

சிதம்பரம் நகரில் பத்திரிகையாளர்களுக்கு அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது:-

'இலங்கையில் இராணுவம் நடத்திய தாக்குதலில் 61 தமிழ்ச் சிறுமிகள் படுகொலை செய்யப்பட்டனர். இதைக் கண்டித்து 17 ஆம் திகதி தமிழகச் சட்டப்பேரவையில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதற்காக தமிழக அரசுக்கும் அ.தி.மு.க. , ம.தி.மு.க. உட்பட அனைத்துக் கட்சியினருக்கும் பாராட்டுத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இது குறித்து கருத்துத் தெரிவித்த இலங்கைத் தூதுவரை உடனடியாக நாட்டைவிட்டு வெளியேற்ற வேண்டும். சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகத்தையும் மூடவேண்டும். மேலும், இலங்கை கிரிக்கெட் தொடரைப் புறக்கணித்துவிட்டு இந்திய அணி நாடு திரும்பவேண்டும்'' - என்றார் திருமாவளவன். (ஐ)

## இடம்பெயர்ந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

* 11.08.2006ஆம் திகதி தொடக்கம் இதுவரை இடம்பெயர்ந்த 5 ஆயிரம் குடும்பங்களுக்கு இலவசமாக விநியோகம் மேற்கொள்ளப்படும். ஒரு குடும்பத்திற்கு இரண்டரைக் கிலோ அரிசி, 2 கிலோ சீனி, ஒரு கிலோ பருப்பு என்ற அளவில் விநியோகிக்கப்படும்.

* இடம்பெயராத ஏனைய குடும்பங்களுக்கு இரண்டரைக் கிலோ அரிசி, 2 கிலோ சீனி, ஒரு மீன் ரின். (5 பேருக்கு மேற்பட்ட குடும்பத்திற்கு) அரிசி ஒரு கிலோ 36 ரூபா படியும், சீனி கிலோ 65 ரூபா படியும் மீன்ரின் 50 ரூபா படியும் விற்பனை செய்யப்படும்.

குடும்ப அட்டை வைத்திருப்போருக்கு மட்டுமே பணத்துக்கு உணவுப் பொருள்கள் வழங்கப்படும்.

எக் காரணம் கொண்டும் குறிப்பிட்ட விலைக்கு அதிகமான பொருள்களை விற்பனை செய்யக்கூடாது என்று அரச அதிபர் ப.நோ.கூ.சங்கங்களை கேட்டுள்ளார்.

யாழ்ப்பாணம், வேலணை, கரவெட்டி, நல்லூர், காரைநகர், அச்சுவேலி, நீர்வேலி, பண்டத்தரிப்பு, அளவெட்டி, புலோலி, பருத்தித்துறை, தெல்லிப்பளை, சங்கானை, சுன்னாகம், நெடுந்தீவு ஊர்காவற்றுறை, கட்டைவேலி, உடுப்பிட்டி ஆகிய ப.நோ.கூ சங்கங்கள் பொருள்களை கொள்வனவு செய்துள்ளன என்றும் - குறிப்பிட்ட சங்கங்களுக்கு உட்பட்ட பிரதேச மக்கள் உடனடியாக பொருள்களை பெறலாம் என்றும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

சாவகச்சேரி, கொடிகாமம், கைதடி ஆகிய ப.நோ.கூ. சங்கங்கள் இதுவரை பொருள்களை களஞ்சியத்திலிருந்து பெறவில்லை என்றும் -

எனவே குறிப்பிட்ட சங்க நிர்வாகத்தினர் உடனடியாக பொருள்களைப் பெற்று விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அரச அதிபர் கேட்டுள்ளார். (1)

## சென்னையில் நேற்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கறுப்புக் கொடி, கறுப்பு உடை மற்றும் கறுப்புப்பட்டி அணிந்து பேரணியில் பங்கேற்றனர்.

பேரணியில் முல்லைத்தீவு அவலத்தைச் சித்தரிக்கும் வகையிலான சவப்பெட்டி ஒன்றும் முல்லைக்கோரக் காட்சிகளை விளக்கும் பதாகைகளும் எடுத்துச் செல்லப்பட்டன.

பேரணியின் நிறைவில் சேப்பாக்கம் விருந்தினர் மாளிகை முன்பாக பழ. நெடுமாறன் மற்றும் பெ. மணியரசன் ஆகியோர் கண்டன உரைகளை நிகழ்த்தினர்.

இப்பேரணியில் பெண்கள், கைககுழந்தைகள் மற்றும் இளைஞர்கள் பெருமளவில் பங்கேற்றனர்.

இதேவேளை,

சென்னையில் நேற்றுக் காலை வள்ளுவர் கோட்டம் அருகே புதிய நீதிக் கட்சி சார்பில் இலங்கை அரசாங்கத்துக்குக் கண்டனம் தெரிவித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. புதிய நீதிக் கட்சியின் தலைவர் ஏ.சி. சண்முகம் இந்தப் போராட்டத்துக்கு தலைமை வகித்தார்.

முல்லைப்படுகொலைச் சம்பவத்தை கண்டித்தும் இலங்கை அரசாங்கத்துக்கு இந்தியா உதவக்கூடாது என்பதை வலியுறுத்தியும் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றோர் பதாகைகள் ஏந்தியிருந்தனர்.

சேலம் அருகே நங்கவல்லி என்ற கிராமத்தில் மகிந்த ராஜ பக்ஷவின் கொடும்பாவியை எரித்த 45 பொதுமக்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொள்ளாச்சியில் அருகே காளியப்ப கவுண்டன் புதூரில் இயங்கி வரும் தாய்த் தமிழ்ப் பள்ளி மாணவிகள் 70 பேர் உட்பட 200 பொதுமக்கள் பங்கேற்ற அமைதி ஊர்வலம் நேற்று நடைபெற்றது.

உடுமலைப் பேட்டையில் கல்லூரி மாணவர்கள் ஒருங்கிணைப்புக் குழு சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் பங்கேற்றார்.

ஈரோடு கருங்கல்பாளையத்தில் பேரணியும் பொதுக்கூட்டமும் நேற்று மாலை நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழ் தமிழர் இயக்கப் பொதுச்செயலாளர் தோழர் தியாகு உட்படப் பலர் கண்டன உரை நிகழ்த்தினர்.

மதுரையில் பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பில் மகிந்த ராஜபக்ஷவின் கொடும்பாவி எரிக்கப்பட்டது.

திருப்பூரில் தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம் சார்பில் கண்டப் பேரணி நடத் தப்பட்டுள்ளது.

சேலம் மேட்டூரில் சனிக்கிழமை அனைத்துக் கட்சியினர் பங்கேற்ற அமைதிப்பேரணியும் கண்டனப் பொதுக்கூட்டமும் நடைபெற்றன.

இப்பேரணி மற்றும் பொதுக் கூட்டத்துக்கு பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் தா.செ.மணி தலைமை வகித்தார். திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணா திமுக, பாமக, இடது சாரிக் கட்சிகள், இந்திய தேசிய காங்கிரஸ், விடுதலைச் சிறுத்தைகள் உட்பட அனைத்துக் கட்சியினரும் தொழிற்சங்கத்தினரும் பேரணியில் பங்கேற்றனர்.

முல்லைத்தீவு படுகொலைக் காட்சிகளையும் ஈழத் தமிழர் படுகொலைக் காட்சிகளையும் விவரிக்கும் பதாகைகளையும் பேரணியில் பங்கேற்றோர் ஏந்தியிருந்தனர்.

சென்னையில் இன்று திங்கட்கிழமை "இலங்கை இனவெறி போரை எதிர்ப்போம் தமிழின விடு தலையை ஆதரிப்போம்" என்ற முழக்கத்தை முன்வைத்து 'முகம்', 'கவிதாசரன்', 'கலை', 'யாதும் ஊரே', 'மெய்யறிவு', 'கல்வெட்டு' பேசுகிறது ஆகிய சிற்றிதழ்கள் ஏற்பாட்டில் கண்டன அரங்கக் கூட்டம் நடைபெறுகிறது. சென்னை அண்ணாசாலை தேவ நேயப்பாவாணர் நூலக அரங்கில் நாளை மாலை இந்நிகழ்வு நடைபெறுகிறது.

(ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.08.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.